**தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தம்பர் 28 ஆம் திகதி தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 632.11 பில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 299.68 பில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 332.43 பில்லியன் அதாவது 52.59 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | |
| மீண்டெழுபவை | 47.39 | 47.33 | 0.06 | 0.13 |
| மூலதனம் | 584.72 | 252.35 | 332.37 | 56.84 |
| **மொத்தம்** | **632.11** | **299.68** | **332.43** | **52.59** |

## 2.2 வருமானக் கணக்கு

திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டிற்காக வருமானக் குறியீட்டிற்காக ரூபா 40.00 பில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 19.38 பில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 48.45 சதவீத அளவாக இருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | பற்றாக்குறை மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.04.00 | 40.00 | 19.38 | 20.62 | 51.55 |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 24001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| 7.00 | 6.96 | 5.00 | 5.06 | 25.00 | 21.25 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0262/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.09 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 வருமானக் கணக்கு

திணைக்களத்தால் 20.03.04.00 என்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற மோட்டார் சைக்கிள் தொடர்பான ஆரம்பக் கொடுப்பனவு தொடர்பான வருமானக் கணக்கு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக இந்த வருமானக் குறியீட்டிற்காக ரூபா 40.00 மில்லியன் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் கீழ் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இந்த வருமானக் குறியீட்டின் கீழ் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய 2016 ஆம் ஆண்டிற்கான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதும், 2015 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்டுள்ள தவறுகளை திருத்துவதற்கு தேவையான சீராக்கங்களை கணக்கு வைப்பதற்காக மாத்திரம் இந்த வருமானக் குறியீடு பயன்படுத்தப்பட்டதாக திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 40.00 மில்லியனாக இருந்த போதிலும், வருமானக் கணக்குகளின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 19.38 மில்லியனாக இருந்தது. அது திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் 48 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது. எவ்வாறெனினும், தவறுகள் திருத்தப்பட்டதன் பின்னரான

தேறிய வருமானம், திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் 69 சதவீதம் என திணைக்களம் குறிப்பிட்டிருந்தது.

(இ) இந்த வருமானக் குறியீட்டிற்காக நிதிப்பிரமாணம் 128(2)(இ) இன் பிரகாரம் அரையாண்டு நிலுவை வருமான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன், அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மோட்டார் சைக்கிள்களுக்கு உரித்தற்ற பதவிகளுக்காக இடமாற்றம் பெற்றுச் செல்லும் போது அல்லது பதவியை கைவிட்டுச் செல்லும் போது அல்லது ஓய்வு பெற்றுச் செல்லும் போது மோட்டார் சைக்கிள்களுக்காக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வருமானக் கணக்கிற்கு உரித்தற்ற ரூபா 879,310 கூட்டுத்தொகை திணைக்களம் மற்றும் மூன்று மாவட்ட செயலாளர்களினால் வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) வருமானக் கணக்கிற்கமைய ஏற்றுமதி விவசாய திணைக்களத்திலிருந்து ரூபா 138,500 தொகையான வருமானம் கிடைத்திருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அந்த திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட கணக்கிணக்க பத்திரங்களில் அந்த வருமானம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தினால் கிடைத்திருந்த வருமானம் அனுப்பப்பட்டுள்ள அறிக்கைகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்காமையால், வருமானக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஊ) இரத்தினபுரி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்குரிய ரூபா 560,420 தொகையும், நிவித்தில பிரதேச செயலகத்திற்குரிய ரூபா 566,840 தொகையும், எலபொத்த பிரதேச பிரதேச செயலகத்திற்குரிய ரூபா 144,920 தொகையுமாக ரூபா 1,272,180 கூட்டுத்தொகை மீள செலுத்த வேண்டிய மற்றும் தவறுகளை திருத்தும் பெறுமதிகளென 2017 சனவரி 10 ஆந் திகதிய கடிதத்தில் இரத்தினபுரி மாவட்ட செயலாளரால் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இந்த திருத்தங்கள் அந்த நிறுவனங்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமென திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(எ) உத்தியோகத்தர்கள் பதவிகளிலிருந்து விலகும் போது மீளளிப்பு செய்யப்படும் பணத்திற்குரிய மோட்டார் சைக்கிள் தொடர்பான தகவல்கள், நிதிக் குத்தகை பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்குரிய நிதியீட்டம் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டின் போது மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது அவ்வாறு கிடைக்கப்பெற்ற பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களினால் பொது வைப்புக் கணக்கின் தீர்ப்பனவுகள் நாளதுவரையாக்கப்பட்டிராததுடன், 2017 யூன் 01 ஆந் திகதியில் உள்ளபடியாக வைப்புக் கணக்கில் அவ்வாறு தீர்ப்பனவு செய்வதற்காக ரூபா 78.79 மில்லியன் மீதியொன்று நிலவியது.

2017 செப்தம்பர் 30 ஆந் திகதியளவில் அந்த வைப்பு மீதியில் ரூபா 33.00 மில்லியன் காணப்படுவதாகவும், தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்வதற்கு நிதி நிறுவனங்களைப் போன்றே உத்தியோகத்தர்களிடமிருந்தும் தகவல்களை பெற்றுக் கொள்வதிலான தாமதங்கள் நிலவியமையால் இந்த மீதியை தீர்ப்பனவு செய்ய முடியாதுள்ளதாகவும் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம், அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக 2014 ஆம் ஆண்டு முதல் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் இரண்டு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு, உரிய மாவட்ட செயலகங்களினால் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், மாவட்ட செயலாளர்களால் கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கைக்கமைய தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் நிதிக் குத்தகை முறைமையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, இந்தக் கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதி செய்ய கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

(ஐ) பதவிகளை கைவிட்டுச் செல்லல் மற்றும் ஏனைய பதவிகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லல் போன்ற சந்தர்ப்பங்களில் உரிய உத்தியோகத்தர்களால் மீளச் செலுத்தப்படும் பணம் மற்றும் பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிதி தொடர்பான தகவல்கள் திணைக்களத்திற்கு கிடைத்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பொருத்தமான நடைமுறையொன்று திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு, ஒரே உத்தியோகத்தருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சைக்கிள்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் துறையல்லாத பதவியொன்றிற்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் போது உரிய பணம் செலுத்தப்படாத சந்தர்ப்பங்களும் வெளிப்படுத்தப்பட்டன. அது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக உறுதிப்படுத்துவதற்கு போதியளவான சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இது தொடர்பில் 2016 மே 16 ஆந் திகதிய பீடீ/ஜீபீஎஸ்/130/9/14/எம்சீ-4 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் அறிவுரை கடிதத்தில் அதற்குரியதாக ஒழுக்கத்துடன் செயற்படுவதற்கான அதிகாரம் குறித்த நிறுவனத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதாக திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஒ) கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,971.66 மில்லியன் மூலதன பெறுமதியும் ரூபா 1,484.81 மில்லியன் வட்டியும் செலுத்தப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய மூலதன பெறுமதி ரூபா 11,960.00 மில்லியன் ஆகும். அத்திகதியில் உள்ளபடியான செலுத்த வேண்டிய வட்டி தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

---

24001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள பொது மரணமடைந்த இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 305,621 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதிகள் இரண்டு 15 மற்றும் 16 வருடங்களாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) சேவையை கைவிட்டுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 307,599 கூட்டுத்தொகையான கடன் மீதியை 1 முதல் 6 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகள் 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

2008 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 83,325 தொகையான வெளிநாட்டுப் பிரயாண செலவின முற்பணம் 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக திணைக்களத்தின் கட்டுநிதி கணக்கிலான ரூபா 86,932 தொகையான மீதியை 2017 ஒக்தோபர் 28 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு இயலாது போயுள்ளது.

### 3.4 திணைக்களத்தின் புத்தகங்களில் உள்ளடக்கப்படாத கணக்குகள்

திறைசேரி கணனி அச்சீட்டு குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்ட 7000/0000/00/0374/0002/000 ஆம் இலக்கமுடைய ரூபா 89,043 தொகையான ஆரம்ப மீதியொன்று நிலவிய கணக்கு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு உரித்துடையல்ல என்பது கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், சில வருடங்களாக முன்கொண்டுவரப்படும் அந்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான அசைவுக் கூற்றொன்று 2004 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான நிலையான சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கமைய அந்த ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி குறிப்பிடப்படாத 580 உருப்படிகள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

திணைக்களத்தின் வாகனங்களுக்கு ஏற்பட்ட 12 விபத்துக்களில் 04 விபத்துக்களுக்குரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஏப்ரல் 29 ஆந் திகதி திணைக்களத்தின் வாகனமொன்றிற்கு ரூபா 22,508 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 மற்றும் 109 வரையான பிரமாணங்களுக்கமைய செயற்பட்டு நட்டத்தினை அறவிடுவதற்காக அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 செயலாற்றல்

2016 இன் வருடாந்த பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2016 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாம் பட்டோலையின் 240 ஆவது தலைப்பின் கீழ் குறைநிரப்பு உதவு சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடு பொறுப்புக்கள் செயற்திட்டத்திற்காக ரூபா 623,645 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடொன்றின் மூலம் ரூபா 55.00 மில்லியன் மேலதிக நிதியேற்பாடு

பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 623,700 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்திற்கமைய ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 623,645 தொகையான நிதியேற்பாடுகளில் நிகழத்தக்க சந்தர்ப்பங்களுக்கான நிதியத்திற்காக ரூபா 360 மில்லியன் மற்றும் 146 பாதீட்டு முன்மொழிவுகளுக்காக ரூபா 623,285 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த செயற்திட்டத்திலிருந்து ரூபா 291,274 தொகையான நிதியேற்பாடு ஏனைய தலைப்புக்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதற்கமைய செயற்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 332,426 மில்லியன் தொகையான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. அந்த எஞ்சிய நிதியேற்பாடுகளில் 84 பாதீட்டு முன்மொழிவுகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் ரூபா 330,876 மில்லியனாக இருந்தது. அந்த சேமிப்பு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டில் 13 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. அவற்றுள் 37 பாதீட்டு முன்மொழிவுகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 230,806 மில்லியன் நிதியேற்பாட்டில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சில பாதீட்டு முன்மொழிவுகள் நடைமுறை பிரச்சினைகளின் காரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது, அவ்வாறு நடைமுறைப்படுத்தப்படாத பாதீட்டு முன்மொழிவுகளுக்குரிய நிதி மற்றும் பௌதீக முன்னேற்றமொன்று இல்லாதிருந்தமையால், அதற்குரிய நிதியேற்பாடுகள் விடுவிக்கப்படாமையால், அந்த வருடத்தின் இறுதியில் நிதியேற்பாடுகள் எஞ்சியிருப்பதாகவும் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் பிரிவிற்கமைய தலைப்பு 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைகள் பொறுப்புக்கள் செயற்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் நிதியேற்பாடுகளை மாற்றுதல் மற்றும் அதற்கான காரணங்கள் நிதியேற்பாடு மாற்றப்பட்ட திகதி முதல் 02 வருடங்களினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதிகாரச்சட்டத்தின் 6(2) ஆம் பிரிவிற்கமைய அவ்வாறு மாற்றப்பட்ட அனைத்து நிதியேற்பாடுகளும், அதற்குரிய விபரங்கள் மற்றும் அதற்கான காரணங்கள் 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்படும் அரசின் நிதிச் செயலாற்றல் அறிக்கை (Government's Fiscal Performance) மூலம் பாராளுமன்றத்திற்கு அனைத்து தகவல்களையும் சமர்ப்பிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதாவது வருடத்தின் ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 114,886 கூட்டுத்தொகையான மீண்டெழும் மற்றம் மூலதன நிதியேற்பாடுகள் மாற்றப்பட்டிருந்த போதிலும், அந்த தகவல்கள் அறிக்கையில் மூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டிற்கான நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைகள் பொறுப்பு செயற்திட்டத்தின் கீழ், 2016 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதியேற்பாடு ரூபா 623.3 பில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கிற்கமைய தேறிய நிதியேற்பாடு ரூபா 623.7 பில்லியனாக இருந்தது. அதற்கமைய ரூபா 0.4 பில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அந்த அறிக்கையில் செயற்திட்டத்தின் கீழான நிதியேற்பாடுகளில் மாற்றங்களின் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 246.9 பில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஒதுக்கீட்டுக் கணக்கிற்கமைய அது ரூபா 291.3 பில்லியனாக இருந்தது. அதற்கமைய ரூபா 44.4 பில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதி அமைச்சின் 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் பிரகாரம் 2003 இன் 03 ஆம் இலக்க அரச நிதி (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் குறைநிரப்பு உதவி சேவைகள் மற்றும் அவசர தேவைகள் பொறுப்பு செயற்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மாற்றல்கள் தொடர்பான தகவல்கள், 2016 ஆம் ஆண்டிற்கான அரச நிதிச் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த தகவல்கள் 2017 இன் அரச நிதிச் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தினால் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைக் பொறுப்பு செயற்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளிலிருந்தான மாற்றங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவு பரிசோதனையின் போது உரிய பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள், மேலதிக நிதியேற்பாடு கடிதங்களில் திருத்தப்படாத தகவல்கள் உள்ளடக்கப்பட்ட சந்தர்ப்பங்கள், மேலதிக நிதியேற்பாட்டினை வழங்கும் போது தேவைப்பாட்டு மதிப்பீட்டிற்கமைய அதற்குரிய அங்கீகாரங்கள் பரிசோதிக்கப்பட்டு அவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்தாது நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் 2.2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விசேட மதியுரை கோவைக்கு இணங்காத வகையில் நிதியேற்பாடுகள் மாற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டின் போது செலவின விடயங்களின் கீழ் 1355 சந்தர்ப்பங்களில் மேலதிக நிதியேற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு மாற்றப்பட்ட நிதியேற்பாடுகளில் அவ்வவ்போது இரத்துச் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 6(1) உப பிரிவின் பிரகாரம், அந்த நிதியேற்பாடுகளிலான மாற்றல்கள் தொடர்பான தகவல்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிதியேற்பாடுகளிலான மாற்றல்கள் இரத்துச் செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் அதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2015 யூலை 29 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் மூலம் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிப்பதற்காக அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டிருந்தன. அதற்கமைய வரையறுக்கப்பட்ட அரச வளங்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமகவும் பயன்படுத்துவதற்காக பாதீட்டினை தயாரிக்கும் போது தற்போது பயன்படுத்தப்படும் அபிவிருத்தி செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பாதீட்டு முறைமை (Modified Programme budgeting) இற்கு பதிலாக, அரச செலவினங்களை முழுமையாக மீளாய்விற்கு உட்படுத்தி ‘‘பூச்சிய அடிப்படையிலான பாதீட்டு நடைமுறை’’ (Zero Based Budgetting Approach) அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. பூச்சிய அடிப்படை பாதீட்டு முறைமை நிலவும் திட்டமிடல், பாதீடு செய்தல் மற்றும் மீளாய்வு நடைமுறையுடன் இணைந்த நடைமுறையானதெனவும், அதன் மூலம் வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தல் முறைமைகள் மற்றும் மாற்றுவழிகளை இனங்காண எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அவ்வாறே அது தற்போதைய நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றல், நிதியங்களை வழங்குவதற்காக நியாயத்துவம் மற்றும் முறையான மீளாய்வான்றிற்காக கவனம் செலுத்தி தர்க்கரீதியாக மற்றும் நம்பகமாக வளங்களை மீள பகிர்ந்தளிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நெகிழ்ச்சியான முகாமைத்துவ பிரவேசமொன்றென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 139.23 பில்லியன் கூட்டுத்தொகையான பெயரளவுப் பெறுமதிகள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தமை மற்றும் ரூபா 12.96 பில்லியனுக்குரிய நிதியேற்பாடுகள்

கோரப்பட்டிராத உருப்படிகளுக்காக நிதியேற்பாடுகளை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தின் முக்கியமான பிரிவுகளில் கூடுதலான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 06/2015 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டு பூச்சிய அடிப்படையிலான பாதீடு அறிமுகப்படுத்தப்பட்டு அதன் மூலம் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தினதும் நிலவுகையை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தினதும் செயன்முன்னேற்றம் தொடர்ச்சியான மேற்பார்வையொன்று மற்றும் மதிப்பீடொன்றும் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு 2015 ஆம் ஆண்டிற்குரிய செயன்முன்னேற்றம் தொடர்பான அனைத்து தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டிற்கான 494 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளில் 130 முன்மொழிவுகளின் நிதி செயன்முன்னேற்றம் மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**3.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 39 | 36 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 04 | 00 |
| (iii) | இரண்டாம் நிலை | 75 | 63 | 12 |
| (iv) | ஆரம்ப நிலை | 37 | 35 | 02 |
| | **மொத்தம்** | **155** | **138** | **17** |